FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319438

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **7/2026** Date: நாள் **28.08.2026**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018** Sections பிரிவுகள்: **7 , 12 r/w 7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **27.08.2026** Date to : நாள் வரை **27.08.2026**
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **13.30 hrs** Time to : நேரம் வரை **20.00 hrs**
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **28.08.2026** Time : நேரம் **1200 hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - III** Time நேரம் **1200 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **சுமார் 55 கி.மீ. தெற்கு**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **பேரூராட்சி அலுவலகம், சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம்.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **P. ஸ்ரீதரன்**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம்.**
துணை ஆய்வுக்குழு அலுவலர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

நான் இன்று 28.08.2026 ஆம் தேதி காலை 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் P.ஸ்ரீதரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.எண்.க.IC1/464/2026 நாள் :28.08.2026, ஐயா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சேத்தியாதோப்பு பேரூராட்சி அலுவலகம் – கைப்பற்றப்பட்ட

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. ஸ்ரீதரன் 28/8/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28/8/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. ANBALAGAN
Rank: நிலை Inspector of Police, VAC, Cuddalore

தனித்தாள்

கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற.எண்.7/2026 ன் பக்கம் 1ல் வரிசை எண் 7ல் குற்றம்சாட்டப்பட்டவர்களின் முழுமையான விவரங்கள்.

(1) திருமதி.M.உமாமகேஸ்வரி, வயது 50/2026, செயல் அலுவலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி,

(2) திரு.M.ராஜகோபால், வயது 57/2026, த/பெ முனுசாமி, வரித்தண்டலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி,

(3) திருமதி.K.கனிமொழி, வயது 33/2026, க/பெ தினேஷ்பாபு, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி,

(4) செல்வி.T.வித்யா, வயது 28/2026, த/பெ தங்கமணி, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி,

(5) திரு.M.அருண்குமார், வயது 32/2026, த/பெ முருகவேல், நான்காம் நிலை ஒப்பந்ததாரர், எண்.4/32–நத்தக்காடு, கிழக்கு ராஜபாளையம் (அஞ்சல்), தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம்.

28/8/2026

ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக – கடலூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான P.ஸ்ரீதரன் ஆகிய நான் 27.08.2026 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும் போது கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு, பேரூராட்சி அலுவலகத்தில், கட்டிட ஒப்பந்ததாரர்கள், பொது பயன்பாட்டு பொருட்களின் வினியோகஸ்தர்கள் ஆகியோர்களிடம் லஞ்ச பணம் பெற்று வைத்துள்ளார்கள் என்ற ரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 11.30 மணிக்கு சென்று, அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் பி.அன்பழகன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேற்படி சேத்தியாத்தோப்பு பேரூராட்சி அலுவலகத்திற்கு மதியம் சுமார் 13.30 மணிக்கு சென்றால் செயல் அலுவலர் அவர்களுக்கு கொடுக்க வைத்துள்ள மற்றும் ஏற்கனவே பெற்று வைத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.பி.அன்பழகன் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 12.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு சோத்தியாதோப்பு – கும்பகோணம் சாலையில் கிழக்கு திசையில் செல்லும் சறுகலான சந்தில் தெற்கு திசையில் கிழக்கு பார்த்து வாயில் கொண்ட ஒரு கட்டிடத்தில் சேத்தியாதோப்பு பேரூராட்சி அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் சேத்தியாதோப்பு பேரூராட்சி அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மதியம் சுமார் 13.30 மணிக்கு கிழக்கு பார்த்தவாறு உள்ள நுழைவு வாயில் வழியாக சென்று, அலுவலகத்தின் ஹாலின் வடமேற்கு திசையில் இருந்த அறையில் கிழக்கு பார்த்தவாறு நாற்காலியில் அமர்ந்திருந்த நபர் சேத்தியாதோப்பு பேரூராட்சி செயல் அலுவலர் என்று தெரிந்துகொண்டு, அவரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை அவரிடம் தெரிவித்து, சோதனைக்கு உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர்

28/8/2026

அவரை விசாரிக்க அவர் தனது பெயர் M.உமா மகேஸ்வரி, (வயது 50), க/பெ. கதிரவன், த/பெ. மதுரை, நிரந்தர முகவரி – சத்யா நகர், வடதிண்ணலூர் கிராமம் & போஸ்ட், செய்யாறு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்றும், தற்போது கோட்டக்கரை தெரு, (மசூதி எதிரில்), வடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவர் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை தெரியப்படுத்தினோம். பின்னர் செயல் அலுவலரிடம் சேத்தியாதோப்பு பேரூராட்சியில் பராமரிக்கப்படும் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேடு கேட்டபோது, அவர் இவ்வலுவலகத்தில் தனிநபர் ரொக்க கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் செயல் அலுவலர் அவர்களை பெண் காவலர் மூலம் மறைவான இடத்தில் சோதனை செய்ய அவரது கைப்பையில் ரூ.5000/– இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, அவர் சரியான முகாந்திரம் கூறாததால், மேற்படி பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி ரூ.5,000/– (500 x 10) கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக ஹாலில் கிழக்கு திசை பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் M.ராஜகோபால், (வயது 57), த/பெ.முனுசாமி, வரித்தண்டலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, வீட்டு முகவரி, நெ.6,சீராங்குப்பம், மேட்டுக்குப்பம் வழி, வடலூர் என்று தெரிவித்தார். அவரது மேஜை மற்றும் டிராயர்களை சோதனை செய்ய டிராயரில் K.T.R. எர்த் மூவர்ஸ் Empty Vouchers–3, ரவி வெல்டிங் ஒர்க்ஸ் Empty Vouchers–3, Haasini Traders, Empty Vouchers–3 (முத்திரை மற்றும் கையொப்பம் உள்ளது), Raja Traders, Empty Vouchers–2 (முத்திரை மற்றும் கையொப்பம் உள்ளது), Eastcoast Trading Company–1 (முத்திரை மற்றும் கையொப்பம் உள்ளது), Thennagam Earth movers Empty voucher–1 (கையாப்பம் உள்ளது), கொண்டியார் ஏஜன்சீஸ் Estimate – 1 ஆகியவை இருந்தது. மேற்குறிப்பிட்ட Empty Vouchers விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரை திரேக சோதனை செய்ய அவரிடம் ரூ.4700/– இருந்தது, அப்பணம் பற்றி விசாரிக்க வரி பணம் ரூ.2000/– என்றும், அவரச செலவிற்கு வைத்திருந்த பணம் ரூ.2700/– என்று கூறினார். வரி பணத்திற்கு ரசீது எதுவும் இல்லை. எனவே, அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இல்லை என்பதால் லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி ரூ.4,700/– (500 x 9, 200 x 1)

28/8/2025

கைப்பற்றப்பட்டது. பின்னர் ஹாலில் பெஞ்சில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் T.வித்யா (வயது 28), த/பெ.தங்கமணி, பரப்புரையாளர் (Animator), வீட்டு முகவரி – நடுத்தெரு, கிளாங்காடு, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம் என்று கூறினார். அவரை மறைவான இடத்தில் பெண் காவலர் மூலம் சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.1,400/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால், ரூ.1,400/– (500 x 2, 200 x 2) கைப்பற்றப்பட்டது. மேலும், எனது உத்திரவுபடி அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை பார்வையிட்டதில், 7448678082 என்ற கைப்பேசி எண்ணில் Indian Overseas Bank கணக்கு எண்.273701000005467 என்ற கணக்கில் 27.05.2026 முதல் 27.08.2026 வரை ரூ.3,15,096.00 சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும் வித்யா என்பவரின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிதம்பரம் கிளை, கணக்கு எண். 273701000005467–ன் 27.05.2026 முதல் 27.08.2026 வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அருகிலிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் K.கனிமொழி (வயது 33), க/பெ.தினேஷ்பாபு, பரப்புரையாளர் (Animator), வீட்டு முகவரி – நெ.77, வடக்கு மேட்டுத் தெரு, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம் என்று கூறினார். அவரை மறைவான இடத்தில் பெண் காவலர் மூலம் சோதனை செய்ய அவரது கைப்பையின் ஒரு பகுதியில் பணம் ரூ.21,835/– இருந்தது. அப்பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, இரண்டு நாட்களாக சொத்துவரி மற்றும் குடிநீர் வரி வசூல் செய்த வரிப்பணம் என்று கூறினார். மேற்படி பணத்தை பற்றி செயல் அலுவலரிடம் விசாரிக்க அவர், 25.08.2026 மற்றும் 26.08.2026 ஆகிய இரண்டு தினங்களுக்கு வரி வசூல் செய்த பணம் என்று கூறி, அலுவலக கணினியிலிருந்து விவரத்தை பிரதி எடுத்து கொடுத்தார். அதனை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் மேற்படி பணம் ரூ.21,835/– திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், எனது உத்திரவுபடி அவரது கைப்பேசியை வாங்கி G–Pay செயலியை பார்வையிட்டதில், 883192738 என்ற கைப்பேசி எண்ணில் Canara Bank கணக்கு எண்.110227126639 என்ற கணக்கில் 04.05.2026 முதல் 26.08.2026 வரை ரூ.2,30,783.00 சந்தேகத்திற்குரிய பண வரவு பரிவர்த்தணை செய்யப்பட்டது

28/8/2026

தெரியவந்தது. பின்னர் அவரது கைப்பேசியை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் M.அருண்குமார், (வயது 32), த/பெ. முருகவேல், நான்காம் நிலை ஒப்பந்ததாரர் என்றும் தனது முகவரி – 4/32, நத்தகாடு, கிழக்கு ராஜபாளையம் அஞ்சல், தலைவாசல், சேலம் மாவட்டம் என்றும், தான் லேபர் காண்ட்டிராக்ட் எடுத்து கட்டப்பட்டுவரும் கட்டடத்தை பார்வையிட சேத்தியாதோப்பு பேரூராட்சியில் தொழிற்நுட்ப உதவியாளராக பணிபுரியும் ராஜ்குமார் என்பவரை அழைத்துச்செல்ல வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.13,000/– (500 x 26) பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணம் செயல் அலுவலருக்கு லஞ்சம் கொடுக்க வைத்திருந்த பணம் என கருதி அப்பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர் செயல் அலுவலர், திருமதி.உமாமகேஸ்வரி, வரித்தண்டலர் திரு.ராஜகோபால், பரப்புரையாளர்கள் திருமதி.வித்யா, கனிமொழி மற்றும் ஒப்பந்ததாரர் அருண்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.24,100/–, (500 x 47, 200 x 3) கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேட்டை செயல் அலுவலரிடம் கேட்க, வருகைப் பதிவேட்டை ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்டதில், பக்கம் எண்.9ல், 27.08.2026 ஆம் தேதி வரிசை எண்.6ல் திருமதி ம.உமாகேஸ்வரி, செ.அ. அவர்கள் 27.08.2026 ஆம் தேதி 'மு' (முகாம்) என்றும், நாளை தேதியான 28.08.2026 ஆம் தேதிக்கு முன்கூட்டிய அவரது சுருக்கொப்பத்தை இட்டுள்ளார். அதற்கு அவர் சரியான விளக்கம் கொடுக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) பொது சுகாதார பொருட்கள் இருப்பு பதிவேடு 2026 – 2027, 2) ஆண்டிற்கு வரவினங்கள் பதிவேடு 2026 – 2027, 3) குடிநீர் உபகரணங்கள் இருப்பு பதிவேடு 2026 – 2027, 4) தெருமின் விளக்கு பொருட்கள் இருப்பு பதிவேடு 2026 – 2027, 5) அலுவலக பணியாளர்கள் வருகைப்பதிவேடு 2026 – 2027, ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 13.30 மணிக்கு துவக்கப்பட்டு சுமார் 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. 27.08.2026ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.24,100/–,

28/8/2026

(1)திருமதி.M.உமாமகேஸ்வரி, வயது 50/2026, செயல் அலுவலர், (2) திரு.M.ராஜகோபால், வயது 57/2026, த/பெ முனுசாமி, வரித்தண்டலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (3) திருமதி.K.கனிமொழி, வயது 33/2026, க/பெ தினேஷ்பாபு, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (4) செல்வி.T.வித்யா, வயது 28/2026, த/பெ தங்கமணி, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (5) திரு.M.அருண்குமார், வயது 32/2026, த/பெ முருகவேல், நான்காம் நிலை ஒப்பந்ததாரர், எண்.4/32–நத்தக்காடு, கிழக்கு ராஜபாளையம் (அஞ்சல்), தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர்களது வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் (1) திருமதி.M.உமாமகேஸ்வரி, வயது 50/2026, செயல் அலுவலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (2) திரு.M.ராஜகோபால், வயது 57/2026, த/பெ முனுசாமி, வரித்தண்டலர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (3) திருமதி.K.கனிமொழி, வயது 33/2026, க/பெ தினேஷ்பாபு, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (4) செல்வி.T.வித்யா, வயது 28/2026, த/பெ தங்கமணி, பரப்புரையாளர், சேத்தியாதோப்பு பேரூராட்சி, (5) திரு.M.அருண்குமார், வயது 32/2026, த/பெ முருகவேல், நான்காம் நிலை ஒப்பந்ததாரர், எண்.4/32–நத்தக்காடு, கிழக்கு ராஜபாளையம் (அஞ்சல்), தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் ---- (P.ஸ்ரீதரன்) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மாவட்டம்.

Madam Submitted,

Received the above computer typed complaint on 28.08.2026 at about 12.00 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption Cr.No.7/2026, u/s 7 and 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 28.09.2026 at 13.30 hours. sd/– xxxx 28/08/2026 (P.ANBALAGAN), Inspector of Police, V&AC, Cuddalore.

28/8/2026
(P. Anbalagan)
Inspector of Police,
V&AC, Cuddalore.